3rd September 1959]

SRI A. A. RASHEED : May I know the actual request of the Kerala Government?

MR. SPEAKER : How can the Hon. Minister answer it?

Filter-point wells

*118 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் எந்தெந்த இடங்களில் எத்தனை வடி முனைக் கிணறுகள் (filter-point wells) ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன ?

(ஆ) அவற்றில் எத்தனை இப்போது நல்ல நிலையில் பயன்பட்டு வருகின்றன ?

(இ) பாசனவசதி இல்லாத வேதாரண்யம் பிர்க்காவில் இது எங்கேனும் சோதித்துப் பார்க்கப்பட்டதா ? அதன் முடிவென்ன ?

(ஈ) இந்தப் பகுதியில் இந்தச் சோதனையை மேலும் செய்யும் உத்தேசம் உண்டா ? அப்படியானால், அதன் விவரமென்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) One thousand twenty-two filter points have been sunk in Cauvery river-beds, border areas and Coleroon belt in Mayuram and Sirkali taluks.

(*b*) 989.

(*c*) Yes, Sir. Some Filter Points were found to be successful. In some places where there is thick fine clay below 8 feet below ground level up to 30 feet, the Filter points have not been successful.

(*d*) No, Sir.

SRI A. VEDARATHNAM : கரியாபட்டிணம் கிராமத்தில் ஒரு பில்டர் பாயின்ட் ஏற்படுத்தப் போவதாகத் திட்டம் இருந்ததே, அது என்ன நிலையில் இருக்கிறது ? சமீபத்தில் அங்கே பரீட்சித்துப் பார்க்க அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதுபற்றி தற்போது என்னிடம் தகவல் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லலாம்.

SRI M. C. MUTHUKUMARASWAMY : பில்டர் பாயின்ட் பரிசோதனை செய்வதற்கு ரூ. 25 டெபாஸிட் கட்ட வேண்டியிருக்கிறது. அப்படிக் கட்டினாலுங்கூட, ஏறக்குறைய முப்பது அடிக்குமேல் ஆழமாகத் தோண்டியும் தண்ணீர் கிடைக்கவில்லையென்றால், ரூ. 150 தனியாகக் கட்டினால் போர் பாயிண்ட் வைக்கிறார்கள். பில்டர் பாயிண்டையே அதிக ஆழமாகத் தோண்டுவதற்குப் போதிய நடவடிக்கையை அரசாங்கம் ஏதாவது எடுத்துக்கொள்ளுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : பில்டர் பாயிண்ட் கிணறுகள் என்றால் முப்பது அடிக்குள்ளே தண்ணீர் இருக்கவேண்டும். முப்பது அடி வரையில் பாறையோ களி மண்ணோ இல்லாமல் மணற்பாங்காக இருக்கவேண்டும். இரண்டும் இருந்தால்தான் பில்டர் பாயிண்டை நாம் ஏற்படுத்த முடியும்.

Health Officers

*119 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether more than 50 per cent of the permanent Health Officers' posts are now being held by retired officers; and

(*b*) if so, the reason for the same?

13rd September 1959

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

SRI N. K. PALANISAMI : சர்வீசில் இருந்துவரும் அனுபவ மிக்க ஹெல்த் இன்ஸ்பெக்டர்களை ஹெல்த் ஆபீசர்களாக ப்ரொமோஷன் செய்வதற்குச் சர்க்காரிடம் ஏதாவது திட்டம் இருக்கிறதா ?

THE HON. SRI M. A. MANICKAVELU: நூற்றிப்பதினாறுபேரிலே 16 பேர்களைத்தான் இம்மாதிரி ரிடையர்டு ஆபீசர்களிலிருந்து நியமித்திருக்கிறோம். கனம் அங்கத்தினர் கேள்வியில் குறிப்பிட்டிருக்கிற 50 பர் சென்ட்டுக்கும் இதற்கும் தொலை தூரமாக இருக்கிறது. போதுமான தேர்ச்சி பெற்றவர்கள் கிடைக்காததால் ரிடையர்டு ஆபீசர்களை நியமிக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

SRI C. NATARAJAN : தலைவர் அவர்களே, வயதாகாதவர்களுக்கு ப்ரொமோஷன் கொடுத்து உத்தியோகங்கள் கொடுத்தால் அவர்கள் வரம்புக்கு மீறாமல் உத்தியோகத்தை நடத்துவதற்கு வசதியாக இருக்கும். வயது முதிர்ந்தவர்களை உத்தியோகத்தில் நியமிப்பதால் அவர்கள் வரம்புக்கு மீறி அதிகாரங்களை எடுத்துக்கொள்கிறார்கள். இம்மாதிரி உத்தியோகஸ்தர்களாக நியமிக்காமல் இருப்பதற்கு அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : அம்மாதிரி உத்தியோகம் கொடுக்காமற்போனால் பொது சுகாதாரம் ரொம்பக் கெட்டுப் போய்விடும். ஆகையால் அம்மாதிரி அவசியமாகச் செய்யவேண்டியிருக்கிறது.

SRI A. VEDARATHNAM : இப்பொழுது நம்முடைய மாநிலத்தில் டாக்டர்களுக்கு நிரம்பப் பஞ்சம் இருக்கிற காரணத்தால் ரிடையரான ஆபீசர்களை இன்னும் அதிகமாகப் போட்டு, அவர்களுடைய சேவையை இன்னும் அதிகமாகப் பயன்படுத்திக்கொண்டு, டாக்டர்களை மருத்துவ நிலையங்களுக்கு அனுப்ப அரசாங்கம் முன்வருமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமானவரை அந்த வகையிலே தான் செய்துகொண்டுவருகிறோம்.

SRI T. S. RAMASWAMY PILLAI : May I know the qualifications required for these posts and whether the vacancies were filled up by retired officers because of the paucity of qualified officers?

THE HON. SRI M. A. MANICKAVELU : Generally they have to undergo a medical course plus health course. The vacancies have been filled up on account of the paucity of qualified officers available.

Linguistic Minorities Conference

* 120-A *Q.*—SRI A. A. RASHEED :
SRI T. T. DANIEL : } Will the Hon. the Chief Minister be pleased to state the decision arrived at the Linguistic Minorities Conference?

THE HON. SRI C. SUBRAMANIAM : The decisions of the Zonal Ministerial Committee on Linguistic Minorities which met at Ootacamund in May 1959 are being finalised and they will be placed before the Southern Zonal Council in due course. The decisions can be published only after discussion by the Zonal Council.